செ.வெ.எண் :755 நாள்: 16.11.2021

# பத்திரிக்கைச் செய்தி
# மேட்டூர் அணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றம்
# பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தல்

கர்நாடகா மற்றும் கேரளாவின் நீர்பரப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழையின் காரணமாக ஒரே நேரத்தில், அதிக அளவு தண்ணீர் வெளியற்றப்படுவதால், மேட்டுர் அணைக்கு வரும் நீர் முழுவதும் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டு, கொள்ளிடம் ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகமாக இருக்கும். எனவே, பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறும், கீழ்க்கண்ட அறிவுரைகளை பின்பற்றுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

- பொதுமக்கள் ஆற்றில் இறங்குவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.
- உபரிநீர் திறந்து விடப்படும் கொள்ளிடம் ஆறு, இதர ஆறுகள் மற்றும் நீர்நிலைப்பகுதிகளில் பொதுமக்கள் யாரும் குளிக்கவோ, நீச்சல் அடிக்கவோ, மீன் பிடிக்கவோ மற்றும் இதர பொழுது போக்கு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம்.
- தண்ணீர் வரத்து அதிகமாக உள்ள இடங்களிலும், அபாயகரமான இடங்களிலும் நீர்ச்சுழல் ஏற்படக்கூடிய இடங்களிலும் பொதுமக்கள் யாரும் தன்படம் (Selfies) எடுப்பதை தவிர்க்கவும், ஆற்றில் இறங்குவதை தவிர்க்கவும் வேண்டும்.
- கால்வாய்கள், ஆறுகள் மற்றும் நீர்நிலைகளில் நீர் அதிகம் திறந்துவிடப்பட வாய்ப்பு உள்ளதால் அந்தப் பகுதிகளுக்கு குழந்தைகள் விளையாடச் செல்லாமல் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பாதுகாத்துக் கொள்ளவேண்டும் எனவும், விவசாயிகள் தங்களது கால்நடைகளை நீர் நிலைகளின் வழியாக அழைத்துச் செல்வதை தவிர்க்க வேண்டும்.
- தண்ணீர் செல்லும் வழியாக ஆற்றை கடந்து செல்லும் பாதைகள் ஏதுமிருப்பின் அவற்றை அடையாளம் கண்டு எச்சரிக்கையுடன் செல்லவேண்டும்.
- ஆற்றில் ஆங்காங்கே உள்ள பள்ளங்களை முன்னதாகவே தெரிந்துகொண்டு, அவற்றை பயன்படுத்தும்போது முன்னெச்சரிக்கையுடன் செயல்படவேண்டும்.

மேற்கண்ட தகவல்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**